Council of Ministers was taken up in the then Madras Legislative Assembly in accordance with the practice in England. I therefore propose to follow that precedent.

I now request the Hon. Chief Minister to move this motion.

3. அமைச்சரவைமீது நம்பிக்கைத் தெரிவிக்கும் தீர்மானம்

THE HON. DR. M. KARUNANIDHI : Sir, I hereby give notice of the following Motion which is requested to be taken up immediately after Questions on Monday the 4th December 1972 :—

' This House expresses its confidence in the Council of Ministers of which Thiru M. Karunanidhi is the Chief Minister. '

MR. DEPUTY SPEAKER : Now the motion is moved. I would like to consult leaders of parties to fix time.

திரு. ஏ. ஆர். பெருமாள் : அதைப்பற்றி பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் பேசிக் கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : இந்த விஷயத்தை பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பார்வேர்ட் பிளாக் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் அவர்களும் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு, இதை அலுவல் ஆய்வுக் குழுவில் வைத்து, இதற்கான நாளை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற கருத்துக்கு நான் ஆதரவு அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுகுறித்து நான் பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் முடிவு செய்யப்படும்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு விவசாய வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை நான் இந்த மன்றத்திற்கு அளிக்கின்றேன்.